வல்லிபுரம்

# ஸ்ரீ சித்திவிநாயக சுவாமி திருவூஞ்சல்

# ஸ்ரீ ஆழ்வார் சுவாமி திருப்பள்ளியெழுச்சி

வல்லிபுரம்

இந்து கல்வி கலாச்சார மன்றம்

புலோலி

குகன் அச்சகம், தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஸ்ரீராமஜெயம்

வல்லிபுரம்

# ஸ்ரீ சித்திவிநாயக சுவாமி திருவூஞ்சல்
# ஸ்ரீ ஆழ்வார் சுவாமி திருப்பள்ளியெழுச்சி

ஆக்கம் :

பண்டிதர் ச. குமரேசையா
பண்டிதர் பெரி. சிவஞானம்

வல்லிபுரம்
இந்து கல்வி கலாச்சார மன்றம்
புலோலி.

இரௌத்திரி பங்குனி
12-4-81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுக்கு

இந்நூலின் வருமானம் முழுமையும் வல்லிபுரம் குருக்கட்டுச் சித்திவிநாயகர் கோவில் திருப்பணிக்கே உரியது என்பதை நூலைப் பெறும் ஒவ்வொரு அடியார்களும் மனதிற் கொள்வார்களாக.

" அருட்சத்தி யிருந் தாடத்தாலாட்டிடுதல் பொன்னூசல் ";

" ஏர்மருவு திருப்பள்ளி யெழுச்சி பணிவிடை கேட்
டார்வமுட னுண்டவரர்கன்பு செயுமியல்பே. "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு: 1 1981 ஏப்றில்

# சமர்ப்பணம்

நாமத் திருக்குளக் கட்டிலுயர்
நலமோ டிலங்கு தருநிழலில்
ஞான்ற நால்வாய் மூன்றுவிழி
நற்செவி யிரண்டா யோர் கொம்பின்

ஏமப் புணையா யெழுந்தருளி
இடரினம் நீக்கி யெமையாளும்
எம் பெருமானே குருக்கட்டூர்
எழிலார் சித்தி விநாயகனே

சோம சுந்தரன் பெருங்கருணைத்
தொடர்பாய்த் தொடர்ந்தெம் விக்கினங்கள்
தொல்லை துயர்கள் நீக்குமருட்
தோற்றப் பொலிவே மமதையொடும்

யாமெம தென்னு மோருணர்விங்கு
இடராய் மாறி யிடருறுத்தி
எம்மை யல்லற் படுத்தாவா
றெம் பெருமானே யாண்டருளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

நமோ நாராயணாய

# மாயனே

இராகம் : சங்கராபரணம் பண் : பழம்பஞ்சுரம்

29 வது மேளம் தாளம் : ஆதி

ஆ : சரிகமபதநிச்

அ : ச்நிதபமகரிச

## பல்லவி

கா, மபா;;; மக கரி | சா தா ; நீ | சா; கரிசரி||

மா யனே... அன்பர் ச கா ய னே. . . . .

2. கா, மபா தாபா; மககரி | சா தா; நீ | சா, மகரிசரி||

மா யனே . . அன்பர் ச கா ய னே . . . . .

3. கம பத மப ரிச்ச்நிதப மககரி | சா தா; நீ | சரிகம பம கரி||

மா ... ய . னே . . . . .அன்பர் ச கா ய னே. . . . . .

கா மா பா, ம கா; மா பா | தா நீச்ா ரீ | ச் நிதப பமகரி||

ம து சூ த ன வ ல். . வி பு ர நா. த. னே...

(மாயனே)

## அநுபல்லவி

தா; பா பா மா கா மா ரீ | கா மா பா தா | பா தா தா: ||

தூ. ய உ ளங் கொண்டு தோ த் த ரித் தே . னே.

பா; கா மா; பா தா நீ | ரிச் நி த ச் நிதப | பமகரி சரிகம||

சே ய னின் உய் ய வே அ . ருள் வ . துன் க. ட. னே...

(மாயனே)

## சரணம்

;பாப பா பா; பா பா | ; ப ச்ா நிதா | பா தப மகமா||

கா லையிற் புள் ளி னம் , க னி வுடன் பா . . ட. வும்

; கமா பமா கரி பம கரிசா | ; ரீ, கமா | பாதப மா மா;||

கட லலை போ... லன்பர் உன் பதம் பா .. ட வும்

;,ம்ா க்ரீ க்ரி க்ரி ச்நிச்ா | ; ச்ா த நீ | ச்ரீ நி ச்ா; ||

சோ லைவ ய ல்கள்சூ.ழும் பால்வண்ணத் திரு மண்ணில்

;,ச்ா க்ரீ ச்நிதபதநிச்ா | ;,ச்ாதபா | தப மக பம கரி||

கோயில்கொண் ட ... தி. ருச் சக்கரத் தா.. ழ் வா. னே.

(மாயனே)

-ப்ரஸாதம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அறிமுகம்

திருவருளின் வாக்கான
    தித்திக்கும் வாசகத்தை
குருவடிவிற் கூட்டி வைத்த
    குருநாதன் கழல் போற்றி
அருள் வடிவில் வந்தென்னை
    ஆட் கொண்டான் பதம்போற்றி
பொருளவனே யென்று சொன்னன்
    பொற்பதங்கள் தினம் போற்றி.

பிறந்தமண் சிறந்ததே. சிறந்த மண்ணில் பிறப்பதும் பெருமையே. பெற்ற தாயும், பிறந்த பொன்னுடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே. ஊரைச் சொல்ல வெட்கப்படுகிறவர்களும் இல்லாமலில்லை. ஊரினுலுயர்ந்தவர்களும், ஊரை உயர்த்தியவர்களும் உண்டு. வரலாறு உலகத்துக்கு மட்டும் சொந்தமென்றில்லை. ஒவ்வொரு ஊருக்குமே வரலாறுண்டு. அந்த வரிசையில் வல்லிபுரம் வரலாற்றுச் சிறப்புடையது; மூர்த்தி, தல, தீர்த்த மகிமை உடையதுமாகும். இப்புனித மண்ணிலே இரு பெரும் ஆலயங்களுண்டு. ஒன்று குருக்கட்டுச் சித்திவிநாயகர் கோவில். மற்றது வல்லிபுரக் கோவில். வல்லிபுரத்தில் கோவில் கொண்ட திருமாலுக்கு ஆழ்வார் சுவாமி யென்று பெயர். இங்கே கருவறையில் சுதர்சனமே மூலமூர்த்தி. இந்தச் சக்கரங்கூட, குடந்தைச் சக்கரபாணி கோவிலில் ஆவாகனம் செய்யப்பட்டிருந்தாலும், அங்கேயோ சக்கரத்தாழ்வார் எனப்படுகிறுர். பத்திரி நாத்திலிருந்து பரமேஸ்வர விண்ணகரம் வரை தெய்வந்துறையிலிருந்து பரமபதம்வரை உள்ள ஆயிரத்தெட்டுத் திருப்பதிகளில் வல்லிபுரமும் ஒன்று. ஊர்ப்பெயர் கோவிலுக்கும் மூலமூர்த்திக்குமாகி, இந்துக்களின் பெயர் வரிசையிலும் முதலிடம் வகிக்கிறது. வல்லிபுரக் கோவில் ஒன்றே ஒன்றுதான் உண்டு என்றுல், அதுவும் வல்லிபுரம் என்ற ஊரிற்றுன் உண்டு. வல்லிபுரம் துறைமுகப் பட்டினமாயும் இருந்த வரலாறுகளுண்டு. சிங்கை நகரே வல்லிபுரம் என்பர் சூழ்கலைவாணர்கள். வல்லிபுரத்துக் கோவில்களை மங்களாசனஞ் செய்தோர் பலர். ஆயினும் இதுவரை ஏட்டிலேறுத பதிகங்களை ஒன்றுக இணைத்துப் புத்தக வடிவில் வெளியிடுவதிற் பெருமகிழ்ச்சியடைகிறேம். இந்நூலை உருவாக்க உதவிய சான்றேர்களுக்கு எமது நன்றி.

வணக்கம்

'பாரதி குடிசை'
வல்லிபுரம்
12-4-81.

முருகவே. பரமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்



வல்லிபுரவூர் குருக்கட்டுப்பதி

# ஸ்ரீ சித்திவிநாயக சுவாமி

# திருவூஞ்சல்

## காப்பு

சிங்கைநகர் எனப்பண்டு செழித்தே பத்திச்
சிறப்பொளிரும் வல்லிபுரத் திருவா ரூரில்
பொங்குமருட் குருக்கட்டுப் பொற்ப திச்சேய்
பூங்கரும்பு மூத்தபிள்ளை புவன மெல்லாம்
தங்குசித்தி விநாயகன்பொன் னூஞ்சல் பாடத்
தரணியுணி வல்லிபுரன் தாள்கள் போற்றி
இங்கருள்க எனவேத்தி இறைஞ்சி நின்றேம்
இடர்வாரா தெமைக்காப்பான் இனிய மாலே.

தலையரசாய்ச் சிவனுமையாள் தந்த செல்வன்
தங்கமணி ஓங்காரத் தனையன் என்றும்
நிலையரசாய்க் குருக்கட்டுப் பதியில் வாழும்
நித்தியசித்தி விநாயகன்மேல் ஊஞ்சல் பாடக்
கலையரசி எந்தாய்நா காக்குந் தெய்வக்
கற்கண்டு கலாபமயில் கருணை வாரி
அலையவிரும் அம்புயத்தாள் அகத்திற் கொண்டாம்
அமிழ்தள்ளித் தேன்தமிழ்தோய்த் தருள்வாள் காப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவூஞ்சல்

தெய்வமணி நால்வேதத் திருக்கால் நாட்டித்
திகழுமணி ஆகமமாம் விட்டம் பூட்டித்
துய்யமணிக் கலைபுராணத் தொன்னூல் சேர்ந்த
தூயமணிக் கயிறதனில் தொட்டு யாங்கள்
உய்யுமணி மூலமந்த்ரப் பலகை கூட்டி
உலகமெலாந் தொழுதேத்தி உவப்பில் மூழ்கக்
கொய்யுமணித் தினைசாலிக் கதலிச் செய்சூழ்
குருக்கட்டு விநாயகரே ஆடீர் ஊஞ்சல். 1

ஆவின்பா லாற்கழுவி அழகை அள்ளி
அமைத்தஉடு நவமணிகள் அநந்தம் தெள்ளிப்
பாவின்பா லெழும்சுவைபோற் பரந்தே நீண்ட
பசியவிசும் பானபட்டு விதானம் பாய்ச்சிப்
பூவின்பா லகன்அயன்மால் புவனம் காணப்
பூம்பட்டுக் குடைதாங்கப் பொருவில் தில்லைக்
கோவின்பா லகன்ஒற்றைக் கொம்பைத் தாங்கும்
குருக்கட்டு விநாயகரே ஆடீர் ஊஞ்சல். 2

விண்புவனப் பொழில்களெலாம் விரவித் தெய்வ
விரைகலந்த கவரிவளி வேந்து வாங்கக்
கண்களிக்குந் தெய்வவொளிக் கதிர்கள் காலும்
கனகமணித் தீபஞ்செங் கதிரோன் ஏந்தத்
தண்ணளிக்கும் வானவர்கோன் தகைமை சான்று
தழைத்தநறுந் தூபங்கள் தாங்க அன்பர்
கொண்ணலங்கள் எலாமளித்துக் குலவுந் தெய்வம்!
குருக்கட்டு விநாயகரே ஆடீர் ஊஞ்சல். 3

திருப்பூத்த அளகையர்கோன் தெய்வச் சீர்சால்
தீஞ்சுவைசேர் அடப்பைகரம் திகழ ஏந்த
மருப்பூத்த பூம்பன்னீர் வருணன் தூவ
மணிச்சேடன் ஆலவட்டம் மாண்பாய்த் தூக்க
அருப்பூத்த நாதவிந்தா லாத்தி யோம்ப
அழகுதமி ழால்வாணி திருவும் வாழ்த்தக்
குருப்பூத்த ஞானமணிக் கொழுந்தே! எங்கள்
குருக்கட்டு விநாயகரே ஆடீர் ஊஞ்சல். 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரும்புசுவைத் தூரியங்கள் கணங்கள் கூட்டக்
கானமழை கந்தருவர் களித்தே கால
அரும்புசுவைத் தேன்மதங்கம் முனியே சேர்க்க
அமிழ்தெனும்யாழ் நாரதரே அழகாய் மீட்ட
விரும்புசுவை ஆடலரம் பையர்கள் மேவ
வெண்சங்கம் மதிசேர்க்க விமல ஞர்சேய்!
குரும்பைமாங் கனிபலவு கூடுஞ் சோலைக்
குருக்கட்டு விநாயகரே ஆடீர் ஊஞ்சல். 5

நெடுமாலுக் குறுசாபம் நீக்கி ஆண்ட
நிர்மலநின் சீரிமையோர் நீடு போற்றத்
தொடுமால்யா கங்களுயர் தூய வேள்வி
தொன்னெறியந் தணர்முனிவர் தொடர்பாய்ப் போற்ற
அடுமால்வெம் கயமுகனை அழித்த செல்வா
அம்மையப்பன் இளையோர்நின் ஆற்றல் போற்றக்
கொடுமால்நோய் தீர்தீர்த்தங் குலவுங் கோயிற்
குருக்கட்டு விநாயகரே ஆடீர் ஊஞ்சல். 6

செழுங்கருணைத் திருக்களிற்றைச் சிவஞர் சேயைத்
தெய்வநறும் மஞ்சனநீர் திகழ ஆட்டி
எழுங்கவிஞர் பட்டணிகள் இலங்கும் நீறு
ஏழுலகும் கமழ்விரைகள் எழிலார் சாந்தம்
தொழும்கழல்கள் தெரியலிவை தூய்தாய்ச் சாத்தித்
துளும்புமழ கொழுகஅடி யார்கள் துய்க்கக்
கொழுஞ்சாலி மலிமருதக் குமுதம் பூக்கும்
குருக்கட்டு விநாயகரே ஆடீர் ஊஞ்சல். 7

தங்கமணி ஒளிர்ஞான முடிகள் ஆடத்
தலைமையொளிர் ஓங்கார வதனம் ஆடப்
பொங்குமருட் திரிநயனம் பூத்தே ஆடப்
பொலனபய வரதமொடு கரங்கள் ஆடத்
துங்கமணி மூசிகவா கனமும் ஆடத்
துலங்குகொடி பூணூலும் ஆடஆடக்
குங்குமச்சேய்! சித்திபுத்தி வல்ல பாசேர்
குருக்கட்டு விநாயகரே ஆடீர் ஊஞ்சல். 8

விக்கினங்கள் தீர்த்தருளும் விறற்சீர் பாடி
வேண்டுங்கால் விரைந்தருளும் விழுச்சீர் பாடித்
தக்கபெரும் தனிமுதன்மைத் தலைமை பாடித்
தண்மதியைத் தேய்த்தணிந்த தகைமை பாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்களிக்கப் பாரதத்தை எழுதல் பாடி
எடுத்தொடித்த கொம்பதனல் எழுதல் பாடிக்
கொக்கினமார் வயற்பைம்பொற் கொழுந்தே! ஞானக்
குருக்கட்டு விநாயகரே ஆடீர் ஊஞ்சல். 9

காத்தளிக்கும் கற்பகமே ஆடீர் ஊஞ்சல்
கலைஞானக் கொம்புடையீர் ஆடீர் ஊஞ்சல்
தோத்தரிக்க அருள்பொழிவீர் ஆடீர் ஊஞ்சல்
தும்பிமுகக் கணபதியே ஆடீர் ஊஞ்சல்
நாத்தளிர்க்கும் நினைப்போற்ற ஆடீர் ஊஞ்சல்
நால்வேத நாயகனே ஆடீர் ஊஞ்சல்
கூத்துவப்பான் சேயேநன் காடீர் ஊஞ்சல்
குருக்கட்டு விநாயகரே ஆடீர் ஊஞ்சல். 10

## வாழி

பொன்மாரி பொழிந்தினிதாய்ப் புவனம் வாழ்க
புகழரசு முனிவர்பூ சுரர்கள் வாழ்க
சொன்மாரிக் கலைஞானச் சுருதி வாழ்க
சிவனுமைபா லகர்மால்சேய் சுரர்கள் வாழ்க
நன்மாரிப் பால்தரும்ஆ வினங்கள் வாழ்க
நாவரசி யோடுதிரு நயந்தே வாழ்க
கொண்மாரி அருள்வல்லி புரமூர் சேர்ந்த
குருக்கட்டு விநாயகரே வாழ்க! வாழ்க!!

## எச்சரீக்கை

திருமாலருள் பொழிமாரியில் திகழும்வல்லி புரமூர்
மருமான்குருக்கட் டூர்ப்பதி மணியே எச்ச ரீக்கை.

மணிகொண்டுருள் கடல்சேரலே மறையோதிநன் கமையும்
பணிதொண்டுகள் புரியும்பதிப் பாலா எச்ச ரீக்கை.

நெடுமால்மகிழ் திருவாரணி நெற்றித்திரு நாமம்
சூடிகொள்குள வயலூர்வரு கோவேஎச்ச ரீக்கை.

அமிழ்தார்முகம் அருளேயுரு அபயங்கரம் அருளும்
தமியேம்திரு வடிகள்தொழத் தருவாய்எச்ச ரீக்கை.

அடியார்க்கருள் பெருமாவலில் அலரைந்தொளிர் கரமார்
வடிவேகுருக் கட்டூர்க்கண பதியேஎச்ச ரீக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராக்கு

ஆனைமுக நாயகவி நாயகப ராக்கு
மானைவிழை நாயகர்தம் முன்னேப ராக்கு
கானைவிழை நாயகிமுன் களிறேப ராக்குத்
தேனைவிழை வள்ளிகுகன் சேர்த்தாய்ப ராக்கு.

வேதமுத லாயொளிர்வி நாயகப ராக்குப்
பேதமிலாய் நம்சிவனிற் பிள்ளாய்ப ராக்கு
ஆதவனே ஞானவொளி ஆனவப ராக்குப்
பாதபழந் தந்தருளும் பரனேப ராக்கு.

## லாலி

பரிதிவிழி ஒன்றுடைய பால லாலி — தூய
எரிவிழியாம் ஒன்றுடைய ஏக தந்த லாலி

சோமவிழி ஒன்றுடைய சோதி லாலி — எங்கள்
ஏமமவை மூன்றுவிழி இறைமகனே லாலி

தங்கமணி வதனமருள் தலைவ லாலி — இங்கு
எங்களைநீ காத்தருளும் இறைவா லாலி.

## மங்களம்

1. மூசிக வாகனற்குச் சுபமங்களம் — இந்த
மூவுலகும் காப்பவர்க்குச் சுபமங்களம்.

2. மோதகப் பிரியருக்குச் சுபமங்களம் — சிவன்
மூத்தமக னவர்க்குச் சுபமங்களம்.

3. ஆனைமுக ஐங்கரர்க்குச் சுபமங்களம் — அன்புத்
தேனைமிகத் தேடுவோர்க்குச் சுபமங்களம்.

4. கூறுதுயர் தீர்ப்பவர்க்குச் சுபமங்களம் — எங்கள்
குருக்கட்டு விநாயகர்க்குச் சுபமங்களம்.

**மங்களம் மங்களம் சுபமங்களம்**

**சுபம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் நமோ நாராயணாய ஓம்



# வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி
# திருப்பள்ளி எழுச்சி

## காப்பு

பூவார் குருக்கட்டுப் பொற்பார் கணபதிநம்
நாவார நின்றே நமையியக்க — பாவார்சீர்
வல்லிபுர ஆழ்வார் வளமார் திருப்பள்ளி
நல் லெழுச்சி வேண்டுகின்றோம் நாம்:

## திருப்பள்ளியெழுச்சி

மாதவா நாம்நிதம் போற்றித் துதிக்கும்
மாயனே கோபா லாமணி வண்ணா
யாதவர் தங்குலத் துதித்தநற் தேவே
யாவர்க்கு மரியையா யெமக்குநன் கினியோய்
ஏதவம் நாம்செய்யி னுமெமைநீ மன்னித்
திரங்கியே யருளுவை யெம்பெரு மானே
ஆதவ னுதித்தனன் அழகார் வல்லிபுரத்
தாழ்வாரே நீபள்ளி யெழுந்தரு ளாயே. 1

வல்லி புரத்துளோம் எமதுநல் வாழ்வே
வந்துனைப் போற்றி யன்பொடு பணிவோர்தம்
தொல்வினைப் பழியெலாந் துடைத்தற வகற்றி
துணைமலர்ப் பாதங்கள் சூட்டிநன் கினிதே
வெல்வினை யுயர்நெறிப் படுத்தியாள் கின்ற
விட்டுணு வேவல் லியாழ்வா ராகிய
செல்வனே நின்னடி தொழவந் துற்றனம்
தேவாநீ பள்ளி யெழுந்தரு ளாயே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்குயில் கூவின நற்புள்ளின மியம்பின
பொற்பார் வெல்கொடிச் சேவலும் விளம்பின
ஈங்குமற் றெவருமே யினித்துயில் கொள்ளார்
எழுந்தனர் எழுந்துனைத் தொழவந் துற்றனர்
பாங்குறு நல்லெழிலார் கீழ்த்திசை வானிற்
பகலவன் ஒளிசேர் சாயல்வந் துற்றது
ஓங்குயர் சக்கர பாணியே வல்லிபுரத்
துத்தமநீ பள்ளி யெழுந்தரு ளாயே. 3

யாழ்த்திசை தொறுந்தொறும் எலாமிங் குநின்புகழ்
யார்யார் வந்துனைத் தொழுவரோ அவரிடர்
வீழ்த்திசைப் பட்டே ஒழியநீ அருளுஞ்சீர்
வெற்றிநற் றிறம்கேட் டேபுல ராமுன்
சூழ்த்திசை யெங்கணு முள்ளோ ரனைவரும்
தூயநன் மலரொடு மிங்குவந் துற்றனர்
கீழ்த்திசை யாதவன் கிரணங்கள் காண்கின்றோம்
கிருஷ்ணு நீபள்ளி யெழுந்தரு ளாயே. 4

கண்ணு நின்சீ ரருட்கற வைகளெலாம்
காலமோ டெழுந்துதம் கன்றினுக் கிரங்கி
விண்ணு ளரசா முனதுநற் பூசைக்கும்
விநயமோ டீந்தன அழகுயர் வெள்ளிநற்
கிண்ணத் தமுதுமக் களித்திடு முன்னே
கேடிலா தாவன செய்யவேண் டாவோ
வெண்ணிறப் பட்டுயர் வானமும் வெளுத்தது
விட்டுணு வேபள்ளி யெழுந்தரு ளாயே. 5

ஈரடி யேயெடுத் திம்மூவுல களந்
தின்னோ ருயரடி யெடுத்ததை மாவலிக்காம்
பேரடி யாக்கிய பெரும்பே ரரசே
பிரிவிலா தெமையிணைந் தியக்குநற் தேவே
ஊரடித் தொண்டர்நாம் வல்லி புரத்துளோம்
உறுமயல் ஊருளோர் நினக்கே யாளாம்
சீரடித் தொண்டர்கள் யாவரு முற்றனம்
சிறீதரனே பள்ளி யெழுந்தரு ளாயே. 6

சூட்டி யேயழகு பார்த்துச் சூட்டுமோர்
சுந்தரத் தோகைநற் பக்திச் சுடரொளி
நாட்டியிங் கெமதுளத் தெமையுநீ யாள்வாய்
நலங்கொள் பருவமிங் கணைந்திடு நாள்வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டிநீ வதைப்பினும் வதைப்பாய் வதைத்தே
வருந்தநீ தேற்றியும் தீர்த்துமிங் கருள்வோய்
சூட்டிநின் திருவடி யெமையாள் வதுன்கடன்
சுந்தராநீ பள்ளி யெழுந்தருளாயே. 7

நற்று மரைப்பூ வரும்பெலாம் மலர்ந்தன
நாயகனு மாதவன் வரவுகண் டினிதே
கற்று வுளமெனக் கனிந்த பேரன்பொடும்
கருதுசீ ரடியா ருளதலத் தரும்பிய
பொற்று மரைசேர் பொன்னரும் பின்னும்
பூத்துப் பொலியவிங் கிலையே யென்னே
வற்று நினதருள் நயனநல் லொளிமிக
வல்லிபுராநீ பள்ளி யெழுந்தரு ளாயே. 8

ஆழ்வா ரவருயர் அடிப்பொடி சூடுநல்
ஆழ்வார் அடியார் அடியார்மற் றவரெலாம்
சூழ்வார் நினைநிதம் இன்றுமே சூழ்ந்தனர்
சுந்தர நின்னெழிற் தோற்றமிங் குணர்ந்ததில்
ஆழ்வார் ஆழ்ந்தாழ்ந் தினிதேநின் ஆழ்வார்
ஆவதோர் உணர்விலே யூழ்கிநல் வல்லியூர்
வாழ்வார் அவருமிங் குற்றனர் அண்ணலே
வல்லிபுராநீ பள்ளி யெழுந்தரு ளாயே. 9

பண்பார் பரம! நாதநற் சங்கொடு
பரந்தொளி வீசுயர் சக்கர மேந்தியே
விண்பா ரனைத்துயர் விளைவெலாம் பேணும்
விட்டுணு வாகிய தேவநற் கடலொடும்
மண்பார்த் தெமைநீ பாராதுற் றிருந்தும்
மருவிநா முற்றிட மலியருள் ஈவோய்
கண்பார்த் தருள்வாய் மணிவண்ணு சீரருட்
கண்ணுநீ பள்ளி யெழுந்தரு ளாயே. 10

கற்கோ வளஞ்சேர் கடலொடு நன்வான்
கலக்கின்ற வாறு மாங்கே தூய
பொற்கோ வாகிய நற்சீ ராதவன்
பொற்பார் கிரணங்கள் பொலியநாம் கண்டோம்
நற்கோ வாமுய ரெம்பெரு மானே
நாடிநா முற்றனம் வல்லிபுரா நாம்
கற்கோம் பிறிதொரு நாமம் கற்கியாம்
கண்ணுநீ பள்ளி யெழுந்தரு ளாயே. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிநின் னருளார் பொன்மலர்ப் பாதங்கள்
புனிதனே புண்ணியா புவனநா யகனே
வேற்றுயர் மலரெவாம் விடுத்துநல் லுண்மை
விளக்கியே விளங்கிடும் நன்னீர்த் தேக்கமாம்
சேற்றிடை மலர்ந்தசெந் தாமரை யேசூடும்
தேவனே யச்செந்தா மரைகளும் மலர்ந்தன
போற்றுமெம் உளமலர் மலர்ந்திட வேண்டாவோ
பரந்தாமாநீ பள்ளி யெழுந்தரு ளாயே. 12

" ஸ்ரீராம ஜெயம் "

ஓம்

## பாண்டுரங்கன் வாழும்பதி

இராகம் : சுருட்டி தாளம் : ஏகம் கண்டகதி

**பல்லவி**

வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தா னம் அதுநம்
தொல்லைவினை தீர்த்து வைக்கும் மூலஸ்தானம் (வல்லி)

**சரணங்கள்**

கிழைக்கரைக் கடலருகே கிளர்நாவல் மரக்காடும்
பாலைதரு பனைமரங்கள் பரவிநின்ற பதிதனிலே
தாமர்செய் தவத்தாலும் நினைவர்மெய் நினைப்பாலும்
சேவிப்பவர்க் கென்றுமே சேமமதை அருளி நிற்கும் (வல்லி)

பரமாத்மா அவனையே ஜீவாத்மா நாமெல்லாம்
பாங்குடன் அணையவே பாடியே பணிவோமே
திகிரியில் ஜோதிகண்டு முரளியில் நாதம்கேட்டு
பாற்கடலில் அமுதுண்டு மூச்சினில் நாமம்காண்போம் (வல்லி)

ஆண்டாள் நாச்சிமார் ஆதிசேஷன் அனுமனுடன்
வேண்டிநிற்கும் பக்தருக்காய் விருப்புடனே காட்சிதரும்
பாண்டுரங்கன் வாழும்பதி பழம்பெருமைச் சிங்கபுரம்
நீண்ட கடற்கரையில் நிமிர்ந்துநிற்கும் வல்லிபுரம். (வல்லி)

சிங்கைநகர் " இளம்பிறையாளன் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org